மில்க்வைற் இலவச வெளியீடு:



உ

# திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச்செய்த

# கோளறு திருப்பதிகம்

வெளியிடுவோர்:

சிவநெறிப்புரவலர்

**க. கனகராசா ஜே. பி. அவர்கள்**

உரிமையாளர்

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

"திரு ஆலவாய்" யாழ்ப்பாணம்.



சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002

உ

# அணிந்துரை

பிறர் ஒருவர்தானும் மனம்நொந்து வேதனைப் படாமல் வாழ்வதே வாழ்க்கை. இது அடிப்படையான மூலதர்மம்.

இதனை மறந்து, பிறர்படும் வேதனையாகிய பெரு நெருப்பில் உணவு தயாரித்து மகிழ்கின்றது சாதாரண உலகம்.

அணுவாயுதந் தொடக்கம் கிருமி நாசினி பரியந்த மானவை, மனிதப்பூண்டையே தீர்த்துக்கட்டும் பணியைச் செய்துவருகின்றன.

## வேலிகள் பயிரை மேய்கின்றன

பஞ்சம், பட்டினி, புதுப்புது நோய், பருவமழையின்மை, விலைவாசி ஏற்றம் என்றின்னோரன்னவை மனக்கவலையைக் கணந்தோறும் பெருக்கிக்கொண்டேயிருக்கின்றன.

## கலியின் கொடுமை இருந்தவாறு!

மனக்கவலை மாற்றுதற்கு ஒரே ஒரு மருந்து, உள்ளத்தைத் தூய்மை செய்து, அதில் இறைவன் திருவடிகளைப் பிரதிட்டைபண்ணி, எக்கருமத்தைச் செய்யும்போதும் மறவாது பூசித்து, ''நல்வழி காட்டுக'' என்று பிரார்த்திப்பதேயாம். இதுவே செய்தவம்.

கோளறுபதிகத்தில், பாடல்தோறும் உள்ளத்தைத் தூய்மைசெய்து, அதில் இறைவனை இருத்திக்கொள்வது பற்றிவருந்தொடர்கள் ஊன்றிச் சிந்திக்கவேண்டியவை.

சிந்தனை தெளிவுபெறும் முறையில், கோளறுபதிக பாராயணம் நடைபெறுமாயின், உலகம் கடைத்தேறும், உய்யும்.

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.''

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

# கோளறு திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் நங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும் இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி அதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை ஒருபாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனுல்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையாக வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
    மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
    உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
    இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
    அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனல்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
    குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
    உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
    திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
    அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

## மந்திரம்

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனுத்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்.

சுத்த சத்துவகுணம் பொருந்தியவரும், ஆன்ம ஒளியை வளர்ப்பவருமாகிய முக்கண்ணனைத் தியானிப் போமாக.

காம்பிலிருந்து வெள்ளரிப்பழம் தானே விடுபடுவது போல, பிறப்பு, இறப்பு என்ற பந்தத்திலிருந்து உமதருளால் விடுபடுவோமாக. பேரின்பப் பாதையிலிருந்து விலகாதிருப்போமாக.

உ

# காயத்ரி மந்திரம்

ஓம் பூர்புவஸ்ஸுவ:

ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்

பர்கோ தேவஸ்ய திமஹி ।

தியோ யோ ந: ப்ரசோதயாத் ॥

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டுக்கும், மக்களுக்கும்
பயனுள்ள நற்பணிகளுக்கே
உதவுகிறது

இலவச பிரசுரங்கள் பெற விரும்புவோர் 75 சத முத்திரையுடன் கூடிய சுய விலாசமிட்ட பெரிய கடித உறையுடன் விண்ணப்பியுங்கள்.

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77 யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23233 தந்தி: மில்க்வைற்,